சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

இனிப்புடன் தமிழிசையை சந்தித்தார் அண்ணாமலை

சென்னை, ஜூன் 14: சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை, முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜனை வெள்ளிக்கிழமை சந்தித்தார். அப்போது அவருக்கு இனிப்பும் வழங்கினார்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி அமைத்திருந்தால் முன்னாள் அமைச்சர் வேலுமணி கூறியபடி 35 தொகுதிகளுக்கு மேல் வென்றிருக்கலாம் என்றும் திமுக இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றிருக்காது என்றும், கூட்டணி தொடர்பான தனது கருத்தை துணிச்சலாக வெளிப்படுத்துவேன் என்றும் தமிழிசை சௌந்தரராஜன் கூறினார்.

அண்ணாமலையை மறைமுகமாக விமர்சிக்கும் வகையில் தமிழிசை கருத்துக் கூறியது சர்ச்சையானது.

இந்த நிலையில், தொடரும் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் வகையில் சென்னை சாலிகிராமத்தில் தமிழிசை சௌந்தரராஜனை அவரது வீட்டில் அண்ணாமலை வெள்ளிக்கிழமை சந்தித்து இனிப்பு வழங்கினார்.

பதிலுக்கு, அண்ணாமலைக்கு தான் எழுதிய 'வாய்ஸ் ஃபார் ஆல்' என்ற நூலை தமிழிசை பரிசாக வழங்கினார்.

இது தொடர்பாக அண்ணாமலை தனது எக்ஸ் பக்கத்தில், 'பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரும், மாநிலத் தலைவராகத் திறம்படச் செயல்பட்டவருமான தமிழிசை சௌந்தரராஜனை நேரில் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி. தமிழகத்தில் தாமரை நிச்சயம் மலரும் என்பதை உறுதியுடன் கூறி, அதற்காகக் கடினமாக உழைத்த தமிழிசையின் அரசியல் அனுபவமும், ஆலோசனைகளும், கட்சியின் வளர்ச்சிக்கான உத்வேகத்தைத் தொடர்ந்து அளித்துக்கொண்டிருக்கிறது' எனப் பதிவிட்டார்.

இதற்கிடையே, அண்ணாமலை பதிவை 'டேக்' செய்து தமிழிசை வெளியிட்ட பதிவில், 'பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையைச் சந்தித்ததில் மகிழ்ச்சி' எனப் பதிவிட்டார். அண்ணாமலை – தமிழிசை சந்திப்பு மூலம் தமிழக பாஜகவில் கடந்த ஒரு வாரமாக நடந்த சலசலப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை சாலிகிராமத்தில் தன்னை சந்தித்த பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு, தான் எழுதிய நூலைப் பரிசாக வழங்கிய தமிழிசை சௌந்தரராஜன்.

நாகர்கோவில் – தாம்பரம் இடையே இன்று சிறப்பு ரயில் இயக்கம்

சென்னை, ஜூன் 14: நாகர்கோவிலில் இருந்து தாம்பரத்துக்கு சனிக்கிழமை (ஜூன் 15) சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இது குறித்து தெற்கு ரயில்வே சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தென்மாவட்டங்களுக்கு செல்லும் ரயில்களில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில் தாம்பரத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு வெள்ளிக்கிழமை இரவு 10.20 மணிக்கு சிறப்பு ரயில் இயக்கப்பட்டது.

தொடர்ந்து இந்த ரயில் ஞாயிற்றுக்கிழமையும் (ஜூன் 16) தாம்பரத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு இயக்கப்படவுள்ளது.

மறுமார்க்கமாக நாகர்கோவிலில் இருந்து தாம்பரத்துக்கு சனி மற்றும் திங்கள்கிழமைகளில் (ஜூன் 15, 17) சிறப்பு ரயில் (எண்: 06054) இயக்கப்படும். இதில் 9 படுக்கை வசதி கொண்ட பெட்டிகளும், 11 முன்பதிவில்லாத பொதுப்பெட்டிகளும் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த ரயில் செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, திருநெல்வேலி, வள்ளியூர் வழியாக இயக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் சுப்பையா கொலை வழக்கு

மரண தண்டனை விதிக்கப்பட்ட 7 பேர் உள்பட 9 பேரும் விடுதலை

சென்னை, ஜூன் 14: நிலப்பிரச்னைதொடர்பாக நரம்பியல் மருத்துவர் சுப்பையா கொலை செய்யப்பட்ட வழக்கில் மரண விதிக்கப்பட்ட 7 பேர், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இருவர் என 9 பேரையும் விடுதலை செய்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மருத்துவர் சுப்பையா

நிலப் பிரச்னை தொடர்பாக நரம்பியல் மருத்துவர் சுப்பையா, சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் 2013 செப்டம்பர் மாதம் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கில், அரசுப் பள்ளி ஆசிரியர் பொன்னுசாமி, அவரின் மகன்களான வழக்குரைஞர் பாசில், பொறியாளர் போரிஸ் மற்றும் வில்லியம், டாக்டர் ஜேம்ஸ் சதீஷ் குமார், பொறியாளர் முருகன், செல்வபிரகாஷ் ஆகிய 7 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், பொன்னுசாமியின் மனைவி மேரி புஷ்பம் மற்றும் கூலிப்படையைச் சேர்ந்த கபடி வீரர் ஏசுராஜன் ஆகியோருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் விதித்து, 2021 ஆகஸ்டில் சென்னை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்து பொன்னுசாமி, பாசில், போரிஸ், வில்லியம் உள்ளிட்ட 7 பேருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்யக் கோரி விசாரணை நீதிமன்றம், வழக்கு தொடர்பான விவரங்களை சென்னை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தது. இதேபோல, மரண தண்டனையை எதிர்த்து 7 பேரும் ஆயுள் தண்டனையை எதிர்த்து இருவரும் மேல்முறையீடு செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் சுந்தர் மோகன் அமர்வு விசாரித்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில், விசாரணை நீதிமன்றம் முறையாக தங்களின் வாதங்களைக் கருத்தில் கொள்ளவில்லை எனவும், கொலை, கூட்டுச் சதி உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் காவல் துறை தரப்பில் முறையாக நிரூபிக்கவில்லை என வாதிடப்பட்டது.

காவல் துறை தரப்பில், அனைத்து தரப்பு வாதங்களை முழுமையாகக் கவனத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனை உறுதி செய்யப்பட வேண்டும் என வாதிடப்பட்டது.

அனைத்துத் தரப்பு வாதங்கள் நிறைவடைந்ததையடுத்து, வழக்கின் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கில் நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், சுந்தர் மோகன் அமர்வு வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

அதில், குற்றஞ்சாட்டப்பட்ட 9 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை காவல் துறை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கத் தவறிவிட்டது எனக் கூறி, மரண தண்டனை விதிக்கப்பட்ட 7 பேர், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இருவர் என 9 பேருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். 9 பேரும் வேறு வழக்குகளில் தேவையில்லை என்றால் உடனடியாக விடுதலை செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



இந்தியன் வங்கி | சிங்கபெருமாள்கோயில் கிளை
அலகாபாத்

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கி, சிங்கப்பெருமாள் கோயில் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8 மற்றும் 9-க்கு ஏற்ப கடன்தாரர்கள் : **(1) திருமதி. U. உமாமகேஸ்வரி, (கடன்தாரர்/அடமானதாரர்),** க/பெ ஸ்ரீகாந்த், ஃபிளாட் எண்.A-407, 4வது தளம், லைஃப் ஸ்டைல் ஹாப்பினெஸ்ட் அப்பார்ட்மெண்ட் திருக்கச்சூர் ஹைரோடு, சிங்கப்பெருமாள்கோயில், செங்கல்பட்டு - 603 204. **(2) Ms. S. சாரதா தேவி, (இணை-கடன்தாரர்),** த/பெ ஸ்ரீகாந்த், ஃபிளாட் எண்.A-407, 4வது தளம், லைஃப் ஸ்டைல் ஹாப்பினெஸ்ட் அப்பார்ட்மெண்ட், திருக்கச்சூர் ஹைரோடு, சிங்கப்பெருமாள்கோயில், செங்கல்பட்டு - 603 204, ஆகியோருக்கு **20.03.2024** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, அதில் குறிப்பிட்டுள்ள பணத்தை வேண்டிய நிலுவைத்தொகையான **ரூ.26,98,747/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஏழு மட்டும்)** அத்துடன் 20.03.2024 முதல் வட்டி மற்றும் தற்செயலான கட்டணங்களுடன் சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் விதிகள் 8 மற்றும் 9-க்கு இணங்கவும், **13 ஜூன் 2024** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையான **ரூ.26,98,747/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஏழு மட்டும்)** அத்துடன் 20.03.2024 முதல் வட்டி மற்றும் தற்செயலான கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தும் வகையில் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் கீழ்காணும் சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அசையா சொத்தின் விவரம்

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

அடமான சொத்து : ஃபிளாட் எண்.A-407, 4வது தளம், பிளாக் A, "லைஃப் ஸ்டைல் ஹாப்பினெஸ்ட் அப்பார்ட்மெண்ட்", திருக்கச்சூர் ஹைரோடு, சிங்கப்பெருமாள் கோயில், செங்கல்பட்டு - 603 204-ல் உள்ள நிலம் மற்றும் உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். மொத்த UDS 460 சதுர அடி, ச. எண்.249/2A, ச. எண்.250/13, ச. எண்.250/12, ச. எண். 250/11 மற்றும் ச எண்.250/10A1-ல் அடங்கியுள்ளது. 847 சதுர அடி பரப்பளவு கொண்டு செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. எல்லைகள் (விற்பனை பத்திரத்தின்படி) - வடக்கில் : திருக்கச்சூர் ஹை ரோடு, தெற்கில் : ச. எண்.251, கிழக்கில் : ச. எண்.249, மேற்கில் : ச. எண்.250/10, 250/9, 251. எல்லைகள் (மனையின்படி) - வடக்கில் : ஃபிளாட் எண்.406, தெற்கில் : அப்பார்ட்மெண்ட்டின் மூலை மற்றும் மீதமுள்ள பகுதி, கிழக்கில் : முகப்பு அறை மற்றும் அதன்பிறகு மின்தூக்கி, மேற்கில் : பொது பகுதியாக அப்பார்ட்மெண்ட்டின் திறந்த முனை மற்றும் பகுதி.

தேதி : 13.06.2024 — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் வங்கி.**
இடம் : சிங்கபெருமாள் கோயில்

SBI பாரத ஸ்டேட் வங்கி
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மையம்
எண்.556, ஜீவன் ஆனந்த் கட்டிடம், தரை தளம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018.

மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

வ.எண்.1 : கடன்தாரர் பெயர் : திரு. ரகு E
கணக்கு எண். : 40748113857
பதிவு எண். : TN 09 CY 7443
தயாரிப்பு & மாடல் : Auto rickshaw TVS KING ZS + FI
குறைந்தபட்ச விலை: ரூ.50,000/- EMD தொகை : ரூ.5,900/-

விற்பனை விவரம்

மின்-ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் : 27.06.2024 காலை 11.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை

ஏலம் முடிவடையும் வரை தலா 5 நிமிடங்கள் கால அவகாசம் தொடர்ந்து தானாகவே நீட்டிக்கப்படும்

டேவணித் தொகை செலுத்தும் முறை : NEFT/RTGS டிரான்ஸ்ஃபர் மூலமாக கணக்கு எண். **37608156933-ல் "SBI, SMEC, Teynampet, IFSC குறியீடு : SBIN0021011,** என்ற கணக்கில் செலுத்தவேண்டும்.

ஏல உயர்வுத் தொகை : ரூ.1,000/-.

பார்வையிடும் தேதி : 24.06.2024 காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை. தொடர்பு எண். 8667769096.

ஆன்லைனில் டேவணித் தொகையுடன் விலைப்புள்ளியை சமர்பிக்க கடைசி தேதி 25.06.2024 மாலை 3.00 மணி

மேலும் இதர விவரங்களை அறிய விரும்பும் விலைக்குறிப்பீட்டாளர்கள், **உதவி பொது மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, SMEC தேனாம்பேட்டை, எண்.556, ஜீவன் ஆனந்த் கட்டிடம், தரை தளம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018, Ph : 044-24344448 / 8056114169 / 9498654622** என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை முகவரான **M/s. C1 India Pvt. Limited, திரு.பிரபாகரன் M - 7418281709. Website: www.bankeauctions.com** தொடர்பு கொள்ளலாம்.

இடம் : சென்னை — அதிகாரபூர்வ அதிகாரி
தேதி : 11.06.2024 — பாரத ஸ்டேட் வங்கி, SMEC, தேனாம்பேட்டை, சென்னை-18.

திருச்சியில் நட்சத்திர விடுதியை கையகப்படுத்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை

திருச்சி, ஜூன் 14: குத்தகை காலம் முடிந்ததையடுத்து திருச்சி காஜாமலை பகுதியில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியை கையகப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர், வருவாய்த் துறையினர் வெள்ளிக்கிழமை நடவடிக்கை எடுத்தனர்.

திருச்சி காஜாமலை பகுதியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு சொந்தமான இடத்தில் 1994–ஆம் ஆண்டு முதல் குத்தகையின் அடிப்படையில் தனியார் நட்சத்திர விடுதி செயல்பட்டு வந்தது.

குத்தகை காலம் ஜூன் 13–ஆம் தேதியுடன் நிறைவடைந்ததையடுத்து, விடுதியைக் காலி செய்யுமாறு அந்த நிர்வாகத்துக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது.

இந்நிலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக திருச்சி மண்டல மேலாளர் (பொறுப்பு) என்.டேவிட் பிரபாகர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ராஜலட்சுமி தலைமையில் 50-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் விடுதியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது விடுதி தரப்பினருக்கும், அலுவலர்களுக்கும் இடையே வாக்குவாதம் நடைபெற்றது. மேலும், விடுதி தரப்பு ஆதரவாளர்கள் விடுதிக்குள் நுழைய முயன்றனர். அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

தமிழக அரசு விளக்கம்: மாநில அரசு சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்தி: திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்குச் சொந்தமாக 4.70 ஏக்கர் பரப்பில் நிலம் உள்ளது. இந்த இடம் 1994–ஆம் ஆண்டில் தனியார் ஹோட்டல் நிறுவனத்துக்கு 30 ஆண்டுகள் குத்தகைக்கு விடப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் கடந்த 13–ஆம் தேதியுடன் முடிவடைந்து விட்டது.

30 ஆண்டு காலத்துக்கான குத்தகை தொகை ரூ.47.93 கோடியாகும். ஆனால், ஹோட்டல் நிர்வாகம் ரூ.9.08 கோடி மட்டுமே செலுத்தியுள்ளது. மேலும், இதற்கான ஒப்பந்தத்தில் குத்தகை காலத்தை நீட்டிக்கக் கோரக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, நிலுவைத் தொகை செலுத்தப்படாமலும், குத்தகைக் காலம் முடிவடைந்துவிட்டதாலும் முறையான நடவடிக்கையை தமிழ்நாடு அரசு எடுத்துள்ளது என்று விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்காலத் தடை

மதுரை, ஜூன் 14: சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நடவடிக்கைக்குத் தடை விதிக்கக் கோரி, நட்சத்திர விடுதி நிர்வாகம் சார்பில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வெள்ளிக்கிழமை அவசர வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதில், நட்சத்திர விடுதியில் சுமார் 80 சதவீத அறைகளில் சுற்றுலாப் பயணிகள் தங்கியிருப்பதாகவும், அவர்களின் நலன் கருதி நிர்வாக மாற்றத்துக்குத் தடை விதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, தனியார் நிர்வாகத்துக்கான குத்தகை உரிமத்தை அரசு புதுப்பிக்காததால், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விடுதி நிர்வாகத்தைக் கையகப்படுத்த அனுமதிக்க வேண்டும் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி, 'விடுதியின் குத்தகை உரிமத்தை அரசு புதுப்பிக்கவில்லை. அதேநேரத்தில், உரிமம் குறித்து புதிய அறிவிப்பு எதையும் அரசு வெளியிட்டதாகத் தெரியவில்லை. எனவே, விடுதி நிர்வாகப் பொறுப்பை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கையகப்படுத்த வரும் 18–ஆம் தேதி வரை இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது' என உத்தரவிட்டார்.

Canara Bank — Syndicate

தலைமை அலுவலகம் : பெங்களூரு
கிளை அலுவலகம்: ஜெகதேவிபாளையம்

சுவாதீன (POSSESSION) அறிவிப்பு [பிரிவு 13(4)]
(அசையா சொத்துக்கானது)

இப்பவும், 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (சட்டம் 54/2002), (இனி சட்டம் என குறிப்பிடப்படும்) கீழே கையொப்பமிட்டுள்ளவர் கனரா வங்கி ஜெகதேவிபாளையம் கிளையின் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)–ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதி 3–ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியும் 18–07–2023 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பினார். கடன்வித்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் விபரங்கள் பின்வருமாறு

கடன்தாரர்:

M/s ஜெயச்சந்திரன் தனிராம் ஐயர் கல்வி அறக்கட்டளை. பிரதிநிதியாக இதன் நிர்வாக அறங்காவலர் **S.J.** அருண் பத்மநாபன், த/பெ ஜெயச்சந்திரன், ப்ளாட் எண் 21, எண் 6, வைஷ்ணவி அடுக்கக்கம், 3 ஆவது குறுக்குத்தெரு, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை– 600020

ஜாமீன்தாரர் 1:

S.J. அருண் பத்மநாபன், த/பெ ஜெயச்சந்திரன், ப்ளாட் எண் 21, எண் 6, வைஷ்ணவி அடுக்கக்கம், 3 ஆவது குறுக்குத்தெரு, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை– 600020

ஜாமீன்தாரர் 2:

திரு. J. விஜயகுமார், த/பெ ஜெயச்சந்திரன், சந்தூர் கிராமம் மற்றும் அஞ்சல் போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி–635 206

ஜாமீன்தாரர் 3:

திருமதி. சங்கீதா அருண், க/பெ அருண் பத்மநாபன், ப்ளாட் எண் 21, எண் 6, வைஷ்ணவி அடுக்கக்கம், 3 ஆவது குறுக்குத்தெரு, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை– 600020

ஜாமீன்தாரர் 4:

திரு.J.S. ராஜ்குமார், த/பெ ஜெயச்சந்திரன், கதவு எண் 999, இரண்டாவது தளம் 11 ஆவது பிரதான சாலை, பசவேஸ்வராநகர், பெங்களூரு– 560079

ஆகியோர்க்கு அனுப்பி அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **ரூ. 89,53,635.62/– (ரூபாய் எண்பத்து ஒன்பது லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று முப்பத்து ஐந்து மற்றும் அறுபத்து இரண்டு பைசா மட்டும்)** தொகையை அதற்கான வட்டியுடன் முன்சொன்ன அறிவிப்பு கிடைத்த நாளில் இருந்து 60 நாள்களுக்குள் செலுத்துமாறு கோரினார்.

கடன்தாரர்/ ஜாமீனதாரர் மேற்படி பாக்கித் தொகையை திருப்பித்தரத் தவறிவிட்டதால், கடன்தாரருக்கும்/ மற்றும் பொதுமக்களுக்கு பரவலாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில், விதி–8&9–ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை கீழே கையொப்பம்மி இட்டிருப்பவர்மி தமது சுவாதீனத்தில் (POSSESSION) 2024 ஆம் ஆண்டு மே, 15 ஆம் நாளன்று எடுத்துக் கொண்டுள்ளார்.

மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 (8)–இன் கீழான ஷரத்துகளின்படி, ஈட்டுறுதி சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

எனவே, முக்கியமாக கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது, கனரா வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ள தொகையான 30.04.2024 அன்றுள்ளபடி ரூ. 88,32,456.9/– மற்றும் அதற்கான மேல்வட்டி சேர்த்து முழுவதுமாக செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

அட்டவணை –B
(கடனீட்டுச் சொத்து விபரம்)
சங்கீதா அருண் பெயரில் சொத்து உள்ளது

அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட காலி நிலம் அமைவிடம் – எண் 31, தாழம்பூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்., அமையப்பெற்ற சர்வே எண் 9/9, ப்ளாட் எண் 556, விஸ்தீரணப் பரப்பளவு 3892 சதுர அடி நிலம். " அமைந்துள்ள " தி சோழிங்கநல்லூர் கோ ஆப்பரேட்டிவ் மகாநகர் அபெக்ஸ்–II" மாமல்லபுரம் உள்ளூர் திட்டமிடல் ஆணையத்தால், DTCP அங்கீகார எண் 63/2005 நாள் 5/12/2005 மற்றும் தாழம்பூர் சிற்றூராட்சி உட்கோட்டம் சார்பாகவும்கூட அங்கீகரிக்கப்பட்டது.

எல்லைகள்
வடக்கு: சாலை — தெற்கு: காலி நிலம்
கிழக்கு : கால்வாய் — மேற்கு: ப்ளாட் எண் 557

அளவீடுகள்
கிழமேல் வடபுறம் : 96 அடி — கிழமேல் தென்புறம் : 58 அடி
தென்வடல் கிழபுறம்: 68 அடி — தென்வடல் மேல்புறம்: 40 அடி

திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தினுள் அமைந்துள்ளது.

தேதி: 07.06.2024 — அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம்: ஜெகதேவிபாளையம் — கனரா வங்கி

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB — TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, கமெக்ஸ்: 0435-2431746

2002 ஆம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கம் ஆக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் சொத்துக்கள் அமலாக்க சட்டப்பிரிவு 13 (2)-ன் படி **08.05.2024** அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட கேட்பு அறிவிப்பு **திரு.G.கார்த்திகேயன், திருமதி.K.சரண்யா ஆகியோர்களால்** பெற்றுக்கொள்ளப்படாமல் திரும்பி வந்துவிட்டது. ஆகையினால் இந்த கேட்பு அறிவிப்பு பிரசுரிக்கப்படுகிறது.

1.M/s. ஜூபிலன் கன்ஸ்ட்ரக்ஷன், எண்.137, முதல் தளம், காந்தி ரோடு, காஞ்சிபுரம் - 631501.
2. திரு.G. கார்த்திகேயன், த/பெ.G.கோவிந்தசாமி, எண்.1/138 கிருஷ்ணா தெற்கு தெரு, காஞ்சிபுரம் தாலூக்கா மற்றும் மாவட்டம் - 631502.
3. திருமதி.K. சரண்யா, க/பெ.G. கார்த்திகேயன், எண்.1/138 கிருஷ்ணா தெற்கு தெரு, காஞ்சிபுரம் தாலூக்கா மற்றும் மாவட்டம் - 631502.
4.திருமதி.G.சந்திரா, க/பெ.கோவிந்தசாமி, கதவு எண்.288, 137 பல்லவர்பாக்கம் கிராமம், காஞ்சிபுரம் தாலூக்கா மற்றும் மாவட்டம் - 631502.

பொருள்: சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், காஞ்சிபுரம் கிளையில், M / s . ஜூபிலன் கன்ஸ்ட்ரக்ஷன் என்கிற பெயரில் உள்ள கடன் கணக்கு/ஓவர்டிராப்ட் தொடர்பாக.

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல், மற்றும் சொத்துக்கள் அமலாக்க சட்டப்பிரிவின்படி, **08.05.2024** அன்று வங்கி தங்களுக்கு **03.05.2024** வரையிலான நிலுவைத்தொகை

(அ) 1 முதல் 4 -ஆம் நபர்கள் கூட்டாகவும் பலவிதமாகவும் வாங்கிய கடன் கணக்கு எண்.**51212002000281 7 ரூபாய்51,42,277/- (ரூபாய் ஐம்பத்தொரு லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து இருநூற்று எழுபத்து ஏழு மட்டும்)**

மேலும், இந்த கடன் கணக்கு எண். **51212002000281 7** ஆண்டு வட்டி **15.25%** அபராத வட்டி 2.00% (கூட்டு வட்டி அல்ல), அதன் தொகையை திருப்பிச் செலுத்தும் தேதி வரையில் **04.05.2024**-லிருந்து மாதாந்திர வட்டியுடன் தாங்கள் திருப்பி செலுத்துமாறு கேட்பு அறிவிப்பினை வங்கி அனுப்பியிருந்தது. பதிவுத் தபாலை 1,4-ஆம் நபர்கள் பெற்றுக்கொண்டும், 2,3-ஆம் நபர்கள் பெற